இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 261 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 20 – ஞாயிற்றுக்கிழமை 03 மே 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 261 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 20 - Sunday 03 May 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00







உலக உழைப்பாளிகளின் திருநாளாம் மே தினத்தையொட்டி நேற்று முன்தினம் (01.05.2026) காலை 7.30 மணியளவில் சென்னை சிந்தாதிரிப்பேட்டை மேதினப் பூங்காவில் அமைந்துள்ள மேதின நினைவுச் சின்னத்திற்கு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், தி.மு.கழக நிர்வாகிகளும் மலரஞ்சலி செலுத்தினர். இதில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.இராஜேந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சி.வெ.கணேசன், முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மாதவரம் சுதர்சனம் மற்றும் இரா.கிரிராஜன் எம்.பி., மேயர் பிரியா, கே.எஸ்.இரவிச்சந்திரன், தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன், தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், பிடிசி பாலு உள்ளிட்ட கழகத்தினர், தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில்

# தி.மு.கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழும்!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் கழகப் பொதுச் செயலாளரும் காட்பாடி தொகுதி கழக வேட்பாளருமான அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்து பொன்னாடை அணிவித்தார். உடன் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மே தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மே 3 -**

**"உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில் தி.மு. கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழும்" என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் உறுதிபடக் கூறியுள்ளார்.**

**இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் செய்து வந்தனர்.

### வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னுகிறது!

'தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்' என்று சொன்ன தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம்காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

### சென்னையில் கார்ல் மார்க்சுக்கு சிலை!

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக e Scooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை" என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்குச் சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் – செயலாலும் – வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## 2026 சட்டமன்றத் தேர்தல்: கழகத் தலைவர்,

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர்கள் - கழக வேட்பாளர்கள் சந்திப்பு!

**சென்னை, மே 3-**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் 30.04.2026 அன்று அமைச்சர்கள், கழக வேட்பாளர்கள் சந்தித்துப் பேசினர்.**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

### தேர்தல் நிலவரம் குறித்து முதல்வர் கேட்டறிந்தார்!

தமிழகம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகளும், 41 வாக்கு எண்ணிக்கை மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறுகிறது.

தமிழகத்தில் கடந்த பல நாள்களாகவே தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்திருந்த நிலையில் உச்சகட்டத்தை அடைந்தது. தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜரிவாலுடன் சென்னையில் சாலைப் பேரணியில் பங்கேற்று வாக்கு சேகரித்தனர். நடந்து சென்றும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி தமிழகத்தில் மூன்று இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்ட நிலையில், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினார்.

வாக்குப் பதிவு கடந்த 23ந் தேதியன்று நடைபெற்ற நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை கழகப் பொதுசெயலாளர் - அமைச்சர் துரை முருகன் நேரில் சந்தித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.ஆர்.பெரியகருப்பன், சு.முத்துசாமி, சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன் மற்றும் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா.சிவா உள்ளிட்டோரும் முதலமைச்சரைச் சந்தித்தனர்.

இதேபோல், வேட்பாளர்கள் சபா. ராஜேந்திரன், தமிழரசி, நாமக்கல் ராணி, டி.ஜெ.கோவிந்தராஜன், காதர்பாட்சா முத்துராம லிங்கம், கே. எஸ்.மூர்த்தி, ஆஸ்டின், மகேஷ், மணி கண்டன், எஸ்.ஏ. சத்யா ஆகியோரும் முதலமைச்சரை சந்தித்தனர்.

அப்போது தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புக் குழு தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன் மற்றும் தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறை முகம் காஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.